DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 118/17 |
| Deposition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | நாராயணன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 25-07-2022

முதல்விசாரணை

நான் தற்போது பண்டாரவிளையில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 08.06.2016 ம் தேதி மாலை 3 மணிக்கு குரங்கனி கோவிலுக்கு சென்று விட்டு திரும்ப தொட்டில்குடி இரண்டாம் பண்ணைவிளை அருகில் எங்களுக்கு முன்னால் கணவன் மனைவி இருவரும் இருசக்கர வாகனத்தில் குரங்கனி ரோட்டில் சென்று கொண்டிருந்த போது பின்னால் நானும் எனது மனைவியும் என்னுடைய மைத்துனனின் மனைவி மூன்று பேரும் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த ஸ்கார்பியோ கார் மோதி விபத்து ஏற்பட்டது. முன்னால் வாகனத்தை ஓட்டி சென்ற ஆண் விபத்தின் காரணமாக சம்பவ

இடத்திலேயே இறந்து போய்விட்டார். பின்னார் உட்கார்ந்திருந்த பெண் காயம் ஏற்பட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். மேற்சொன்ன விபத்து தொடர்ச்சியாக ஸ்கார்பியோ கார் வேகமாக வந்து முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டு பிறகு எனது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது இதனால் எனது வலது கால் முறிவு ஏற்பட்டது. பின்னால் இருந்த எனது மனைவி மற்றும் மைத்துனன் மனைவிக்கும் காயம் ஏற்பட்டது. காரை ஓட்டி வந்த நபரை என்னால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் வேகமாக வந்து மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு சென்றுவிட்டது. அதனால் என்னால் அடையாளம் சொல்லமுடியாது. நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சேர்க்கப்பட்டு நான்கு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்க்கப்பட்டேன். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை.</u>

மோதி சென்ற வாகனத்தின் பெயர் ஸ்கார்பியோ என்று போலீசார் சொல்லிதான் தெரியுமா என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால்சரிதான். எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனது மைத்துனனின் வண்டி ஆகும். ஒரே வாகனத்தில் மூன்று பேர் பயணம் செய்வது சட்டவிரோதம் என்பது தெரியுமா என்றால் தவறுதான். எனக்கு முன்னால் சென்ற வாகனம் மேற்கிலிருந்து கிழக்காக வந்தது என்றால் சரிதான். நான் சொல்வது போல் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதால் காப்பீடு வாங்குவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை